# பிள்ளையாரை உடைப்போம்!

**பெரியார்**

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
29, இதழியலாளர் குடியிருப்பு
திருவள்ளுவர் நகர் - திருவான்மியூர்
சென்னை - 600 041

## நூல் கிடைக்குமிடங்கள்

பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14
044.30228213

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

**நன்கொடை : ரூ 10.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2011 ஆகஸ்ட் 15



### விநாயகர் கலவர ஊர்வலத்தைக் கண்டித்து ஆக. 28 இல்

# பெரியார் கைத்தடி ஊர்வலம்

விநாயகன் கலவர ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தவும், மரண தண்டனைக்கு எதிராக பரப்புரைப் பயணம் மேற்கொள்ளவும் சென்னையில் நடந்த கழக ஆலோசனைக் குழு முடிவெடுத்துள்ளது.

*__05.8.2011__ அன்று காலை 10 மணிக்கு சென்னை இராயப் பேட்டை முருகேசன் திருமண மண்டபத்தில் கழக ஆலோசனைக் குழுக் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை யிலும், கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை கு. இராமக் கிருட்டிணன், விடுதலை க. இராசேந்திரன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:*

- *கடந்த சில ஆண்டுகளாக மதப் பண்டிகையான விநாயகர் சதுர்த்தியை, இந்துத்துவத்தின் வெறுப்பு அரசியலுக்கு பயன்படுத்தும் போக்கே நிலவி வருகிறது. சிறுபான்மை யருக்கு எதிராக வன்முறைகளைத் தூண்டுவதற்கும், மதச் சார்பின்மைப் போக்கை மாற்றி, பெரும் பான்மை இந்து மத வல்லாதிக்கத்தை நிறுவும் முயற்சிகளும் இதன் வழியாக செய்யப்பட்டு வருகின்றன.*

  *இந்நிலையில் தமிழ்நாட்டு பகுத்தறிவு, இன உணர்வு, ஆரிய பண்பாட்டு எதிர்ப்பு உணர்வுகளைத் தாங்கி, __வடவர் பண்பாட்டு திணிப்பின் குறியீடான விநாயகர் கலவர ஊர்வலத்தை எதிர்த்து பெரியார் கைத்தடி ஊர்வலத்தை 28.8.2011__ ஞாயிறன்று __சென்னை, கோவை__ ஆகிய மாநகர்களில் நடத்துவது என்று முடிவெடுக்கப் பட்டது.*

  *இந்த எதிர்ப்பு ஊர்வலத்தின் நோக்கத்தை விளக்கி வாய்ப் புள்ள இடங்களில் எல்லாம் __16.8.2011__ முதல் தெருமுனை விளக்கக் கூட்டங்களை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

# பெரியார் 'கைத்தடிகளோடு' திரளுவோம்!

வீட்டுக்குள் தனி மனிதர்களின் நம்பிக்கையோடு முடங்கி யிருந்த விநாயகன் வழிபாட்டை வீதிக்குக் கொண்டு வந்து அரசியலாக்கின மதவெறி சக்திகள்.

மத நம்பிக்கையாளர்களாக இருப்பது அவரவர் தனி உரிமை. மத உணர்வுகளை மதவெறியாகக் கட்டமைத்து, சமூகத்தில் பிளவுகளையும், கலவரங்களையும் உருவாக்குவது சமூக, சட்ட விரோத செயல்பாடுகளேயாகும். இவற்றைத் தடுக்க வேண்டிய கடமை ஆட்சிக்கு உண்டு.

மதக் கலவரங்கள் இல்லாத தமிழ்நாட்டில் 'விநாயகன் அரசியல்' ஊர்வலங்கள் மதத்தை அரசியலாக்கத் துடிக்கும் சக்திகளால் அறிமுகம் செய்யப்பட்டன. சென்னையில் அதற்கு முன் இஸ்லாமியர்கள் அமைதியாக நடத்தி வந்த 'மீலாது நபி' ஊர்வலத்துக்கு போட்டியாக வீதிக்குக் கொண்டு வரப்பட்டான் 'விநாயகன்'. கலவரங்கள் வெடித்த போது ஒரு கட்டத்தில் 'மீலாது நபி' ஊர்வலமும் வேண்டாம்; 'விநாயக' ஊர்வலமும் வேண்டாம் என்று அரசு தலையிட்டு நிறுத்தியபோது, இஸ்லாமியர்கள் மீலாது நபி ஊர்வலத்தை நிறுத்திக் கொண்டனர். ஆனால் 'ராம கோபாலன்கள்' விநாயகன் ஊர்வலத்தை மட்டும் தொடர்ந்தார்கள். இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் பகுதி வழியாகவே 'விநாயகன்' ஊர்வலம் வருவான் என்று அடம் பிடித்தார்கள்.

கத்தோலிக்கர்களும், இஸ்லாமியர்களும் அதிகமாக வாழும் கடற்கரை கிராமங்களான குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு, நெல்லை மாவட்டத்தின் இடிந்தகரை, தூத்துக்குடி மாவட்டத்தின் வேம்பாறு, காயல்பட்டிணம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழக்கரை, நாகை மாவட்டத்திலுள்ள முத்துப்பேட்டை, சென்னையில் இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் திருவல்லிக்கேணி பகுதிகளில் விநாயகன் ஊர்வலத்தை முன் வைத்து ஆத்திர மூட்டும் முழக்கங்களை எழுப்பி, கலவரத்தை உருவாக்கினார்கள்.

தமிழ்நாட்டில் இப்போதும் எத்தனையோ கோயில்களில் 'உற்சவக்' கடவுள் வீதிகளில் ஊர்வலமாக வந்து போகின்றன.



இந்த ஊர்வலங்கள் ஏற்படுத்தாத கலவரத்தை, விநாயகன் ஊர்வலங்கள் மட்டும், ஏன் ஏற்படுத்துகின்றன என்பதை சிந்தித்தாலே உண்மை விளங்கி விடும்.

தமிழ்நாட்டில் இந்த 'விநாயகன்' சிலைகளை விதம்விதமான கற்பனையில் உருவாக்கி, வீதிக்கு வீதி நிறுத்தி, இரண்டு வாரங்கள் விழா நடத்தி பிறகு ஊர்வலமாகக் கொண்டு போகும் 'அரசியல் பிரச்சாரத்துக்கு' துணை நின்று ஊக்குவிப்பவர்கள் வடநாட்டுக்காரர்களாகவே இருக்கிறார்கள். உள்ளூரில் அப்பாவி இளைஞர்களுக்கு 'தரவேண்டியதை எல்லாம் தந்து' இந்த நிகழ்வுகளுக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

'விநாயகன்' வழிபாடு என்பதே தமிழர்களுக்கு கிடையாது. இந்த 'விநாயகன்' வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கடவுள்!

தொல்காப்பியம் - சங்க இலக்கியங்கள் - மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற தமிழர் மரபு இலக்கியங்களில் விநாயகன் பற்றியோ, விநாயக வழிபாடு பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை. கி.பி.641-642 ஆம் ஆண்டில் பல்லவ மன்னன் நரசிங்க வர்மன், மராட்டியப் பகுதியான வாதாபிக்கு படை எடுத்துச் சென்றபோது, நரசிங்கவர்மன் படைத் தளபதியாக இருந்த சிறுத் தொண்டர் என்பார், தனது போர் வலிமையால் வாதாபியை வெற்றிக் கொண்டார். தனது வெற்றியின் நினைவாக மராட்டியர்களின் வழிபாட்டுத் தெய்வமான 'விநாயகனை' தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து, சிறுத் தொண்டர் என்ற அந்தப் படைத் தளபதி முதன்முதலாக 'கணபதீச்சுரம்' என்ற கோயிலை தமிழ்நாட்டில் உருவாக்கினார். அதன் பிறகு தான் தமிழ்நாட்டில் 'கணபதி', 'விநாயகன்', 'பிள்ளையார்' வழிபாடு தொடங்கியது. தெ.பொ. மீனாட்சி சுந்தரம் போன்ற தமிழ் அறிஞர்கள் இந்த வரலாற்றை விளக்கியுள்ளார்கள். மராட்டியத்தில் தான் இன்று வரை 'விநாயகன்' பண்டிகை மிகப் பிரபலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

வடநாட்டு பார்ப்பன பண்பாட்டைத் தமிழர்கள் மீது திணிக்கும் முயற்சியாகவே இப்போது 'விநாயகன் ஊர்வலத்தை' இந்து மதத்தின் பெயரால் அரசியல் நடத்த விரும்பும் சக்திகள் கையில் எடுத்துள்ளன.

மலைவாழ் மக்களின் தலைவனாகக் கருதப்பட்ட முருகனை பார்ப்பனியத் தோடு இணைத்து, 'சுப்ரமணியனாக்கியது' போலவே பார்ப்பனர்கள், தமிழர் பக்தி மரபுகளோடு தொடர்பில்லாத 'விநாயகனை' இறக்குமதி செய்து, அதற்காக 'மூத்த பிள்ளையார் இரட்டை மணிமாலை', 'பிள்ளையார் அகவல்', 'பிள்ளையார் காப்பு' என்பவைகளை உருவாக்கி, அதை தமிழர் இலக்கியங்களாக இடைச் செருகல் செய்துவிட்டனர். இந்த விநாயகன் பிறப்புக்கு புராணங்கள் கூறும் கதை ஆபாசத்திலும் ஆபாசம். இப்படி ஒரு ஆபாசக் கதை கொண்ட 'கடவுளை' பகுத்தறிவுள்ள மனிதர்கள் கொண்டாட முடியுமா? அதுவும் விநாயகன் பிறப்புக்கு ஒரு கதையல்ல; ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன. பிறப்பு என்பது உண்மையாக இருக்குமானால், அது வரலாறாக இருக்கு மானால் ஒன்று தானே இருக்க முடியும்? எப்படி பல கதைகள் இருக்க முடியும் என்பதை சிந்திக்க வேண்டாமா?

'விநாயகனை' அரசியலுக்கு முதன்முதலாக இழுத்து வந்தவர் சுதந்திரப் போராட்ட வீரராக சித்தரிக்கப்பட்ட மராட்டியப் பார்ப்பனர் பாலகங்காதர திலகர் தான். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான சுதந்திரப் போராட்டத்தை 'இந்து' மத அடிப்படையில் நடத்தியவர் திலகர். விடுதலை பெறும் இந்தியா - 'இந்து சனாதன தர்ம' ஆட்சியாக மலரவேண்டும் என்பதே அவரது இலட்சியம். 1893 இல் அவர் அரசியலுக்காக தொடங்கி வைத்த 'விநாயகன் ஊர்வலம்' தான் இப்போதும் இந்து பார்ப்பன சக்திகளால் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. அன்று திலகர் நடத்திய ஊர்வலத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான பஜனைப் பாடல்களை உருவாக்கிப் பாடினார்கள். சான்றாக ஒரு பாடலைக் குறிப்பிடலாம்.

“இம் மதம் நம் மதம் இந்து மதம்
ஏன் இன்று இதனை மறுதலிக்கிறாய்?
கணங்களின் நாயகன் கணபதியையும்
சிவனையும் வாயு புத்திரனையும் எங்ஙனம்
மறந்தாய்?
வெற்றுச் சின்னங்களை வணங்கி எப்பேறு
பெற்றாய்?
என்ன வரம் அல்லா அளித்தார் உனக்கு?
இன்று நீ முகம்மதியன் ஆகிவிட்டாய்



அன்னிய மதம் தன்னை அந்நியப்படுத்து
உன் மதத்தை மறந்திடில் நின் வீழ்ச்சி
நிச்சயம்.”

- இத்தகைய 'மதப் பகை'யை உருவாக்கும் பல பஜனைப் பாடல்களை திலகர் நடத்திய ஊர்வலத்தில் அறிமுகப்படுத்தப் பட்டன. திலகர் நடத்திய விநாயகன் ஊர்வலத்தில் பங்கேற்ற சவர்க்கார் தான், பிறகு 'இந்து மகாசபையை' உருவாக்கியவர். காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்.

அதே திலகர் பாதையில் தான் தமிழ்நாட்டிலும், 'இந்து முன்னணி' விநாயகன் ஊர்வலத்தைத் தொடங்கியது. வீதிகளில் வைக்கப்படும் 'விநாயகன்' கரங்களில், ஏ.கே. 47 துப்பாக்கிகள், வீரவாள், கத்திகளைத் தருகிறார்கள். அதற்கு 'வீர விநாயகன்' என்று பெயர் சூட்டுகிறார்கள். இஸ்லாமியர்களுக்கு எதிராக முழக்கமிடுகிறார்கள். அது மட்டுமா?

'பிளாஸ்டிக்' பொருள்களால் உருவாக்கப்படும் இந்த விநாயகன் உருவ பொம்மைகளை கடலில் கொண்டு போய் கிரேனில் இறக்கி, அங்கே அந்த 'விநாயகனை' கட்டைகளாலும், கால்களாலும் அடித்து உடைத்து “அவமதித்து” கடலில் தள்ளுகிறார்கள்.

இதனால் கடல் நீர் மாசுபட்டு சுற்றுச் சூழல் பாதிப்பதை சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைப்புகளே சுட்டிகாட்டி, 'பிளாஸ்டிக்' விநாயகனுக்கு தடை போட்டுள்ளன. சென்னை உயர்நீதிமன்றமும் பெரியார் திராவிடர் கழக வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, இளங்கோவன் தொடர்ந்த வழக்குகளில் 'பிளாஸ்டிக்' விநாயகனுக்கு தடை போட்டது. ஆனாலும், ஆங்காங்கே பகுதி பகுதியாக நடத்தப்படும் ஊர்வலங்களால் பதட்டங்களே மேலோங்கி, கலவரங் களில் போய் முடிகின்றன. எனவேதான் இது மத ஊர்வலம் அல்ல, மத அரசியல் ஊர்வலம் - அதற்கு அரசு அனுமதி தரக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.

1953 ஆம் ஆண்டு தந்தை பெரியார் 73 ஆவது ஆண்டு பிறந்த நாள் செய்தியாக விநாயகன் பொம்மைகளை கடைகளில் வாங்கி, மக்கள் கூடும் இடங்களில் உடையுங்கள் என்று, கருஞ்சட்டைத் தோழர்களுக்கு அழைப்பு விடுத்தார். அந்த 'விநாயகனை' தானும் பொதுக் கூட்ட மேடையிலேயே தனது 'கைத்தடியால்' உடைத்தார். அன்று நடந்த இராஜகோபாலாச்சாரியார் ஆட்சி

*எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சிலை உடைப்பை எதிர்த்து 'ஆஸ்திக சங்கம்' நடத்தி, பெரியார் கொள்கைகளை எதிர்த்து வந்த வீரபத்திரன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள், "ஒருவர், தானே செய்து, தனக்கு சொந்தமான உருவ பொம்மைகளை உடைப்பது குற்றமாகாது; பெரியாரும், அவரது கழகத்தினரும் உடைத்த பிள்ளையார் சிலை, கோயில்களிலிருந்து எடுக்கப்பட்டது அல்ல; அது அவர்களின் சொத்து. அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம்; வணங்கவோ, உடைக்கவோ அவர்களுக்கு உரிமை உண்டு" என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே மக்களிடம் எடுத்துக் கூறுவோம்!*

***கணபதி - விநாயகன் வழிபாடு வடநாட்டு பண்பாட்டின் திணிப்பு. அது தமிழர் வழிபாட்டு முறையல்ல. சைவர் வைணவர்களை ஒரே புள்ளியில் இணைத்து, மதக் கலவரத்துக்கு அணி திரட்ட திலகர் கண்டுபிடித்த 'சூழ்ச்சி'.***

*1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழகம் 'விநாயகன்' கலவர ஊர்வலத்துக்கு எதிராக சென்னையில் ஆனூர் செகதீசன் தலைமையில் பெரியார் கைத்தடி ஊர்வலத்தை நடத்தியது. தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இப்போது ஒன்றுபட்ட பெரியார் திராவிடர் கழகம் மீண்டும் அதே மதக் கலவர சக்திகளுக்கு எதிராக பெரியார் கைத்தடி ஊர்வலத்தை கோவையிலும், சென்னை யிலும் ஆக. 28 இல் நடத்துகிறது.*

**பழமைக்கு சம்மட்டி அடி தந்தது - அந்த கைத்தடி தான்!**
**வைதீகத்தை நடுநடுங்க வைத்தது - அந்த கைத்தடி தான்!**
**பார்ப்பனியத்தை அடக்கி ஒடுங்கச் செய்தது - அந்த**
**கைத்தடி தான்!**
**கருவறைக்குள் நுழைந்த 'தீண்டாமை'ப் பாம்பை -**
**தனது இறுதிக் காலத்திலும், அடித்து சாகடிக்க**
**விரட்டிக் கொண்டு ஓடியது - இதே கைத்தடி தான்!**

*அறிவாயுதமாய் பகுத்தறிவுப் போர்வாளாய் பெரியாரின் கைத்தடியை ஏந்தி மதவெறி அரசியலை சந்திக்கத் தயாராவோம்! தோழர்களே! ஆக.28 - போராட்டத்துக்கு அணியமாவீர், கைத்தடிகளுடன்!*

***11.08.11 - புரட்சிப்பெரியார் முழக்கம்***



# பிள்ளையார்

**- சித்திரபுத்திரன்**

*இந்து மதம் என்பதில் உள்ள கடவுள்களின் எண்ணிக்கை "எண்ணித் தொலையாது. ஏட்டிலடங்காது" என்பதுபோல் எண்ணிக்கைக்கு அடங்காத கடவுள்கள் சொல்லப்பட்டிருப் பதும் அத்தனை கடவுள்களுக்கும் புராணம், கோயில், குளம், பூஜை, உற்சவம், பஜனை, பாட்டு முதலியதுகள் ஏற்படுத்தி இருப்பவை அவைகளுக்காக நமது இந்திய நாட்டில் வருடம் ஒன்றுக்கு பல கோடிக்கணக்கான ரூபாய்களும், பல கோடி ரூபாய் பெரும்படியான நேரங்களும், பல கோடி ரூபாய் பெரும்படியான அறிவுகளும் வெகுகாலமாய் பாழாய்க் கொண்டு வருவதும் எவராலும் சுலபத்தில் மறுக்கக்கூடிய காரியமல்ல.*

*இக்கடவுள்களில் முதன்மை பெற்றதும், மக்களிடம் மிகவும் செல் வாக்குப் பெற்றதும், இந்துக்கள் என்பவர்களில் ஏறக்குறைய எல்லோராலும் ஒப்புக்கொண்டு வணங்கப்படுவது மான கடவுள் பிள்ளையார் என்பது. இதனைக் கணபதி என்றும் விநாயகர் என்றும் விக்கினேசுவரன் என்றும் இன்னும் இது போன்ற பல நூற்றுக்கணக்கான பெயர்களைச் சொல்லி அழைப்பதும் உண்டு.*

*நிற்க, இந்தப் பிள்ளையார் என்னும் கடவுளை இந்துக்கள் என்பவர்கள் தங்களுடைய எந்தக் காரியத்திற்கும் முதன்மையாய் வைத்து வணங்குவதும், கடவுள்களுக்கெல்லாம் முதல் கடவுளாக வணங்குவதுமாக இப்போது அமுலில் இருக்கும் வழக்கத்தை எந்த இந்து என்பவனாலும் மறுக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்டதான யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதும் அதிசெல்வாக்குள்ளதும் முதற் கடவுள் என்பதுமான பிள்ளையாரின் சங்கதியைப் பற்றி சற்று கவனிப்போம். ஏனெனில் கடவுள்களின் சங்கதி தெரிய வேண்டு மானால் முதல்*

முதலாக முதற் கடவுளைப்பற்றித் தெரிவதுதான் நன்மை யானதாகும். ஏனெனில் முதல் கடவுள் என்று சொல்லப் படுவதின் சங்கதி இன்ன மாதிரி என்பதாகத் தெரிந்தால் மற்ற கடவுள்கள் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாயிருக்கலாம். அன்றியும் எந்தக் காரியம் ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளை யார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறையென்று சொல்லப்படுவதால் நாமும் கடவுள்களின் கதைகளைப் பற்றி விளக்கப் போவதில் முதல் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியதும் முறையாகுமன்றோ? இல்லாவிட்டால் 'அக் கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு எடுத்த இக்காரியத் திற்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்' அன்றியும் சமீபத்தில் அக் கடவுளின் உற்சவம் (பிள்ளையார் சதுர்த்தி) ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் ஒரு சமயம் பொருத்த மானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குதும்.



# பிள்ளையார் பிறப்பு

1. ஒரு நாள் சிவனின் பெண்ஜாதியான பார்வதிதேவி தான் குளிக்கப் போகையில் குளிக்குமிடத்திற்கு வேறு ஒருவரும் வராமல் இருக்கும்படியாக ஒரு காவல் ஏற்படுத்துவதற்காக தனது சரீரத்தில் உள்ள அழுக்குகளைத் திரட்டி உருட்டி அதை ஒரு ஆண் பிள்ளையாகும்படி கீழே போட்டதாகவும், அது உடனே ஒரு ஆண் குழந்தை ஆகிவிட்டதாகவும், அந்த ஆண் குழந்தையைப் பார்த்து "நான் குளித்துவிட்டு வெளியில் வரும் வரை வேறு யாரையும் உள்ளே விடாதே" என்று சொல்லி அதை வீட்டு வாயிற்படியில் உட்கார வைத்திருந்ததாகவும், அந்தச் சமயத்தில் பார்வதி புருஷனான பரமசிவன் வீட்டிற்குள் புகுந்ததாகவும், அழுக்குருண்டையான வாயில் காக்கும் பிள்ளையார் அந்தப் பரமசிவனைப் பார்த்து "பார்வதி குளித்துக் கொண்டிருப்பதால் உள்ளே போகக் கூடாது" என்று தடுத்ததாகவும், அதனால் பரமசிவக் கடவுளுக்கு கோபம் ஏற்பட்டு தன் கையிலிருந்த வாளா யுதத்தால் ஒரே வீச்சாக அந்தப் பிள்ளையார் தலையை வெட்டிக் கீழே தள்ளி விட்டு குளிக்குமிடத்திற்குள் போனதாகவும்,

பார்வதி சிவனைப் பார்த்து "காவல் வைத்திருந்தும் எப்படி உள்ளே வந்தாய்" என்று கேட்டதாகவும் அதற்குச் சிவன் "காவல்காரன் தலையை வெட்டி உருட்டி விட்டு வந்தேன்" என்று சொன்னதாகவும், இது கேட்ட பார்வதி தான் உண்டாக்கின குழந்தை வெட்டுண்டதற்காகப் புரண்டு புரண்டு அழுததாகவும், சிவன் பார்வதியின் துக்கத்தை தணிக்க வேண்டி வெட்டுண்டு கீழே விழுந்த தலையை எடுத்து மறுபடியும் ஒட்டவைத்து உயிர் கொடுக்கலாம் எனக்கருதி உடனே வெளியில் வந்து பார்க்க வெட்டுண்ட தலை காணாமல் போனதால் அருகிலிருந்த ஒரு யானையின் தலையை வெட்டி முண்டமாகக் கிடந்த குழந்தையின் கழுத்தில் ஒட்ட வைத்து அதற்கு உயிரைக் கொடுத்து பார்வதியை திருப்தி செய்ததாகவும் கதை சொல்லப்படுகின்றது. இக்கதைக்கு சிவபுராணத்திலும், கந்த புராணத்திலும் ஆதாரங்களுமிருக்கின்றனவாம்.

2. ஒரு காட்டில் ஆண் பெண் யானைகள் கலவி செய்யும்போது சிவனும் பார்வதியும் கண்டு கலவி ஞாபகமேற் பட்டுக் கலந்ததால் யானை முகத் துடன் குழந்தை பிறந்தது என்றும் பிள்ளையார் கதையில் கூறுகின்றதாம்.

3. பார்வதி கர்ப்பத்தில் ஒரு கருவுற்றிருக்கையில் ஒரு அசுரன் அக் கருப்பைக்குள் காற்று வடிவமாகச் சென்று அக்கருச் சிசுவின் தலையை வெட்டிவிட்டு வந்ததாகவும் அதற்குப் பரிகாரமாகப் பார்வதி யானையின் தலையை வைத்து உயிர் உண்டாக்கி குழந்தையாகப் பெற்றுக் கொண்டதாகவும் விநாயகர் புராணம் கூறுகின்றதாம்.

4. தக்கனுடைய யாகத்தை அழிப்பதற்காக சிவன் தனது மூத்த குமாரனாகிய கணபதியை அனுப்பியதாகவும், தக்கன் அக்கணபதி தலையை வெட்டிவிட்டதாகவும், சிவன் தனது இரண்டாவது பிள்ளையாகிய சுப்பிரமணியனை அனுப்பின தாகவும், அவன் போய்ப் பார்த்ததில் தலை காணப் படாமல் வெறும் முண்டமாய்க் கிடந்ததாகவும், உடனே ஒரு யானையின் தலையை வெட்டி வைத்து உயிர்ப்பித்த தாகவும் மற்றொரு கதை சொல்லப்படுகின்றது. இது தக்கயாகபரணி என்னும் பு தகத்தில் இருக்கின்றதாம்.

இன்னும் பல வழிகள் சொல்லப்படுகின்றன. அதனைப் பற்றியும் இப்பிள்ளையாரின் மற்ற கதைகளைப் பற்றியும் மற்றொரு சமயம் கவனிக்கலாம்.

எனவே பிள்ளையார் என்னும் கடவுள் சிவனுக்கோ பார்வதிக்கோ மகனாக பாவிக்கப்பட்டவர் என்பதும் அந்தப் பிள்ளை யாருக்கு யானைத் தலை செயற்கையால் ஏற்பட்ட தென்பதும் ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாகும்.

கடவுள் கூட்டத்தில் முதல்வரான பிள்ளையார் சங்கதியே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதும். அவைகளிலும் எல்லா விதத்திலும் அவர் பிறரால் உண்டாக்கப்பட்டதாகவும், பிறப்பு வளர்ப்பு உடையவராகவும் ஏற்படுவதுமானதாயிருந்தால் மற்றக் கடவுள்கள் சங்கதியைப்பற்றி யோசிக்கவும் வேண்டுமா? நிற்க, ஒரு கடவுளுக்குத் தாய் தகப்பன் ஏற்பட்டால் அந்தத் தாய் தகப்பன்களான கடவுள்களுக்கும் தாய் தகப்பன்கள்



ஏற்பட்டுத்தானே தீரும். (இவைகளைப் பார்க்கும்போது கடவுள்கள் தாமாக ஏற்பட்டவர்கள் என்றால் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்? ஆகவே இந்தக் கடவுள்களும் உலகமும் ஏற்பட்டதற்கு வேறு ஆதாரங்களைக் கண்டு பிடிக்க வேண்டிய தாயிருக்கின்றது. இதனைப் பின்னால் கவனிக்கலாம்)

கடவுளைப் பற்றிய விவகாரங்களோ சந்தேகங்களோ ஏற்படும் போது மாத்திரம் "கடவுள் ஒருவர்தான், அவர் நாம ரூப குணமற்றவர், ஆதியந்தமற்றவர், பிறப்பு இறப்பு அற்றவர். தானாயுண்டானவர்" என்று சொல்லுவதும் மற்றும் 'அது ஒரு சக்தி' என்றும், 'ஒரு தன்மை அல்லது குணம்' என்றும் பேசி அந்தச் சமயத்தில் மாத்திரம் தப்பித்துக் கொண்டு பிறகு இம்மாதிரி கடவுள்களைக் கோடிகோடியாய் உண்டாக்கி அவைகளுக்கு இது போன்ற பல ஆபாசக் கதைகளை வண்டி வண்டியாய்க் கற்பித்து அவற்றை யெல்லாம் மக்களை நம்பவும் வணங்கவும் பூசை செய்யவும் உற்சவம் முதலியன செய்யவும் செய்வதில் எவ்வளவு அறியாமையும் புரட்டும் கஷ்டமும் நஷ்டமும் இருக்கின்றது என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்.

உதாரணமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகின்றோம். சிதம்பரக் கோவிலில் யானை முகங்கொண்ட ஒரு பிள்ளையார் சிலை செய்து அதன் தும்பிக்கையை மற்றொரு பெண்சிலையின் பெண் குறிக்குள் புகவிட்டு இக்காட்சியை யாவருக்கும் தெரியும்படியாகச் செய்திருப்பதுடன் இந்தக் காட்சிக்கு தினமும் முறைப்படி பூசையும் நடந்து வருகின்றது. பல ஆண் பெண் பக்தர்கள் அதைத் தரிசித்துக் கும்பிட்டும் வருகின்றார்கள்.

சில தேர்களிலும் ஒரு பிள்ளையார் உருவம் தனது துதிக்கையை ஒரு பெண் உருவத்தின் பெண்குறியில் புகுத்தி அப்பெண்ணைத் தூக்கிக் கொண்டிருப்பது போலவும் அந்தப் பெண் இரண்டு காலையும் அகட்டிக் கொண்டு அந்தரத்தில் நிற்பது போலவும் செதுக்கப்பட்டிருக்கின்றது. இவைகளைப் பார்த்த யாராவது இது என்ன ஆபாசம் என்று கேட்டால், இவைகளுக்கு ஒரு கதையும் புராணமும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

அதாவது ஏதோ ஒரு அசுரனுடன் மற்றொரு கடவுள் யுத்தம் செய்ததாகவும், அந்த யுத்தத்தில் தோன்றிய அசுரர்களை யெல்லாம்

அந்தக் கடவுள் கொன்று கொண்டே வந்தும், தன்னால் முடியாத அளவு சூரர்கள் ஒரு அசுர திரீயின் பெண் குறியில் இருந்து ஈசல் புற்றிலிருந்து ஈசல் புறப்படுவது போல் பல லக்ஷக்கணக்காய் வந்து கொண்டே இருந்ததாகவும், இதை அறிந்த அந்தக் கடவுள், பிள்ளையார் கடவுளின் உதவியை வேண்டியதாகவும், உடனே பிள்ளையாரானவர் ஈசல் புற்றிலிருந்து கரடி ஈசல்களை உறிஞ்சுவது போல் தனது தும்பிக்கையை அந்த திரீயின் பெண் குறிக்குள் விட்டு அங்கிருந்த அசுரர்களையெல்லாம் ஒரே உறிஞ்சாக உறிஞ்சி விட்டதாகச் சொல்லப்படுகின்றது. எனவே இம்மாதிரியான காட்டுமிராண்டித் தன்மையான ஆபாசங்களுக்கு, கண்டதையெல்லாம் கடவுள் என்று சொல்லும் ‘ஆத்திகர்கள்’ என்ன பதில் சொல்லக்கூடும் என்று கேட்கின்றோம்.

“எவனோ ஒருவன் ஒரு காலத்தில் இப்படி எழுதி விட்டான்” என்று பொறுப்பில்லாமல் சொல்லிவிட்டால் போதுமா? இன்றையத் தினமும் அவ்வெழுத்துக் கொண்ட ஆதாரங்கள் போற்றப்பட வில்லையா? அன்றியும் பல கோவில்களில் உருவாரங்களாகத் தோன்றவில்லையா? இதை “எவனோ ஒருவன் செய்து விட்டான்” என்று சொல்வதானால் இவைகளுக்குத் தினமும் பெண்டுபிள்ளை வாகனம் முதலியவை களுடன் பூஜைகள் நடக்க வில்லையா? என்பது போன்றவை களைச் சற்று யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சீர்திருத்தக்காரர்கள் ‘அப்படி இருக்க வேண்டும்’ ‘இப்படி இருக்க வேண்டும்’என்றும் ‘மதத்திற்கு ஆபத்து, சமயத்துக்கு ஆபத்து, கடவுள்களுக்கு ஆபத்து’ என்றும் கூப்பாடு போட்டு மதத்தையும் கடவுளையும் காப்பாற்றவென்று அவைகளிடம் ‘வக்காலத்துபெற்று’ மற்ற மக்கள் துணையைக் கோரும் வீரர்கள் யாராவது இதுவரை இந்த ஆபாசங்களை விலக்க முன்வந்தார்களா என்றும் கேட்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றி எந்த ஆ திக சிகாமணிகளுக்கும் ஒரு சிறிதும் கவலையில்லாவிட்டாலும் பிள்ளையார் சதுர்த்தி என்கின்ற உற்சவம் என்றைக்கு என்பதில் மாத்திரம் வாதத்திற்கும் ஆராய்ச்சிக்கும் குறைவில்லை என்று சொல்வதோடு இந்த ஆபாசங்களையெல்லாம் ஒழிக்க முயற்சிக்காமல் சும்மா இருந்து கொண்டும், இவ்வாபாசங்களை பிரசங்கம் பண்ணிக்



கொண்டும் இருந்துவிட்டு இதை எடுத்துச் சொல்லுபவர்களை நா திகர்கள் என்று சொல்லி விடுவதாலேயே எந்தக் கடவுளையும் எந்தச் சமயத்தையும் காப்பாற்றிவிட முடியா தென்றே சொல்லுவோம். இனி அடுத்த முறை அடுத்த கடவுளைப் பற்றிக் கவனிப்போம்.

**குடி அரசு - கட்டுரை - 26. 08. 1928**

# முதலில் பிள்ளையாரை உடைப்போம்!

நம்மை சூத்திரனாக தாழ்ந்த ஜாதி மகனாகப் பிறப்பித்து இன்னொருவனை மேல் ஜாதிக்காரனாக, பிராமணனாகப் பிறப்பித்து ஒருவன் சதா காலமும் உழைத்துப் போட்டு ஒன்றுமில்லாமல் வாடவும், தற்குறியாய் இருக்கவும், இன்னொருவன் பாடுபடாமல், உழைக்காமல், மேல் ஜாதிக் காரனாக இருக்கவுமான அமைப்புக்குக் காரணமாக இருக்கிற இன்றைய கடவுள்கள் என்பவைகளை ஒழிக்க வேண்டும். உடைத்துத்தள்ள வேண்டும்.

ஒவ்வொரு கடவுளாக உடைக்கும் பணியை திராவிடர் கழகம் விரைவிலே ஆரம்பிக்கப் போகிறது. அதற்காக விரைவில் ஒரு நாள் போடப் போகிறேன். சென்னை சென்றவுடன் நாள் குறித்து "விடுதலை"யில் எழுதுவேன். திராவிடர் கழக தோழர்களே! தயாராக இருங்கள்!

கடவுள் என்று சொல்லப்படுகிற இந்த பொம்மைகளை ரோட்டிலே போட்டு உடைப்பதற்கு, விரைவில் நாள் தரப் போகிறேன். இப்போதே மண்ணுடையாரிடம் சொல்லி வைத்து அட்வான்சாக ‘கடவுள்’என்று சொல்லப்படுகிற உருவத்தைப் போல மண்ணிலே செய்து வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்; அல்லது கடைகளிலே விற்கிறதே வர்ண பொம்மைகள் அதையாவது வாங்கி ரெடியாக வைத்துக் கொள்ளுங்கள்.

நான் தேதி கொடுத்தவுடன் பொம்மைகளை எடுத்துக் கொண்டு கூட்டம் சேர்த்துக் கொண்டு ஏதாவது ஒரு இடத்திலே நடுரோட்டிலே, முச்சந்தியிலே பலர் கூடுகிற இடத்திலே கொண்டு போய்ப் போட்டு, "இன்ன காரணத்துக்கு ஆக பொம்மையை உடைக்கிறேன்; என்னை கீழ் ஜாதியாகப் பிறப்பித்ததற்கு ஆக உடைக்கிறேன் என்னை சூத்திரன் - வேசி மகன் என்று கற்பித்ததற்காக உடைக்கிறேன்" என்பதாகச் சொல்லிக் கொண்டு உடைக்க வேண்டும்!



உடைப்பதற்கு முதல் "கடவுளாக" எல்லோரும் எதுவும் செய்வதற்கு முதலாக பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப் பார்களே, அந்தப் பிள்ளையாரையே தேர்ந்தெடுக்கிறேன்! தோழர்களே! தயாராய் இருங்கள்! பொம்மைகளை இப்போதிருந்தே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். விரைவில் நாள் கொடுப்பேன்.

விக்ரகங்களை உடைக்கிறேன் என்றவுடன், (குழவிக் கற்களை) கோயிலுக்குள் போய் புகுந்து உடைப்போம் என்று யாரும் கருதவேண்டாம். இந்தப்படி கோயிலுக்குள்ளே புகுந்து கலாட்டா செய்வோம் என்று யாரும் அஞ்ச வேண்டியதில்லை.

கோயிலுக்குள் ஒருவரும் போக மாட்டோம்; குயவரிடத்தில் மண் கொண்டு இன்றைய கோயிலில் இருக்கிற சாமியைப் போல செய்துதரச் சொல்லி, அல்லது கடைகளிலே விற்கிறதே வர்ணம் அடித்த பொம்மைகள் அதை வாங்கிக் கொண்டு வந்து, ஒரு தேதியில் இப்படி இதை உடைக்கப் போகிறோம் என்பதாக எல்லோருக்கும் தெரிவித்து விட்டு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு நடுரோட்டிலே போட்டு உடைப்போமே தவிர,

கோயிலில் புகுந்து விக்ரத்தை பெயர்த்துக் கொண்டு வரும் வேலையையோ, அல்லது அவைகளுக்குச் சேதம் ஏற்படுகிற மாதிரியோ யாரும் நடந்துக் கொள்ளமாட்டார்கள் என்ப தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுபற்றின பூரா விவரங்களையும் சென்னை சென்றவுடன் தெரிவித்து உடைப்பதற்கு தேதியும் கொடுக்கிறேன்.

இந்தப் புத்தாண்டு திட்டமாக சில காரியங்கள் செய்ய வேண்டுமென்று, "விடுதலை"யில் கொஞ்ச நாளைக்கு முன் எழுதியிருந்தேன். அதன் அடிப்படையிலேயே இந்தக் காரியம் துவங்கப்படுகிறது.

பல தோழர்கள் எனக்குப் பல ஊர்களிலிருந்தும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதாவது திராவிடர் கழகத்தார் கோவிக்குக்குள் புகுந்து கோயில் விக்கிரகங்களை சித்திரை துவக்க நாளில் உடைக்கப் போகிறார்கள் என்று கருதி பலத்த போலீசு பாதுகாப்பு வைத்திருப்பதாகவும், இந்தப்படி உடைக்கப் போகிறார்களா? என்று போலீசார் கழக நிர்வாகிகளைக்

கூப்பிட்டுக் கேட்டதாகவும் இன்னும் சி.அய்.டி.கள் தொடருவதாகவும் எழுதியிருக்கிறார்கள்.

அதனால் தான் சொல்லுகிறேன் நாங்கள் கோயிலுக்குள்ளே புகுந்து அந்தக் கோவில் விக்ரகங்களை உடைப்போம் என்று யாரும் பயப்படத் தேவையில்லை என்று.

மேலும் இந்த நாட்டில் வழிவழியாய் இருந்து வரும் சமுதாய அமைப்பை விளக்கியும் இப்படிபட்ட அமைப்பின் காரணமாக ஒரு ஜாதி வேதனைப்படவும், இன்னொரு ஜாதி சுகப்படவுமான தன்மை இருந்து வருகிறது என்பதைத் தெளிவுபடுத்தி, வேத சாஸ்திரங்கள் என்பவைகளின் பித்தலாட்டத்தை விளக்கியும், இந்தக் கடவுள்கள் என்பவைகளின் யோக்கியதையை விளக்கியும், நடத்தையின் ஆபாசங்களை எடுத்துக் காட்டியும், இன்றைய சமுதாய அமைப்பு மாறினால் தான் இந்த நாட்டில் இருக்கிற கஷ்டங்களுக்குப் பரிகாரம் காண முடியுமே தவிர, பொருளாதார உரிமை, ஜனநாயகம் என்று பேசிக் கொண்டிருப்பதால் எந்தவித பலனும் ஏற்பட்டு விடாது!

***04-05-1953. விடுதலை***



# புத்த ஜயந்தி கொண்டாட பொம்மை தயாரித்துக் கொள்ளுங்கள்!

கடவுள் சக்திகள் கோயில் பூசை உற்சவங்கள் சம்பந்தமான பித்தலாட்டங்களை ஒழிக்க வேண்டும் என்கின்ற முயற்சி உலகில் -நாட்டில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்தியா தவிர மற்ற நாடுகளில் நீண்ட நாட்களுக்கு முன்பாகவே நல்ல அளவுக்கு ஒழிந்தும், மறைந்தும் விட்டது.

இங்கு ஒழியாததற்குக் காரணம் மேற்கண்ட கடவுள்கள் முதலியவற்றின் பேரால் பிழைக்க ஒரு ஜாதி பிறவியிலேயே ஏற்பட்டு அவர்கள் தங்களை மேல் ஜாதி, பிராமணார் - மேலோர், மற்றவர்கள் கீழ் ஜாதி சூத்திரர் (அடிமை) கீழோர் என்று சட்டம் - சாஸ்திரம் மூலம் செய்து அத்தன்மைகளை மதத்துடன் - கடவுளுடன் சேர்த்து ஆதிக்கமடைந்து கட்டுப் படாக காப்பாற்றி வருவதால் மற்ற மக்கள் பலர் அறிவும், மானமும் உடையவர்களாக இருந்தாலும் அவர்கள் உதிரிகளாகவும், தனித்தனி சுயநலக்காரர்களாகவும், பிறவியிலேயே தாசி மக்களாகவும் இருந்து வருவதாலும் கட்டுப்பாடான எதிர்ப்பு நடத்தி வெற்றி பெற முடியவில்லை.

எதை தியாகம் செய்தாவது, ஒழித்தாவது, இந்த இழி நிலையை காட்டுமிராண்டித்தனத்தை ஒழித்தாக வேண்டும் என்று யாரும் முன்வரவில்லை. ஆனதால், இத்துறையில் பரீட்சை பார்க்ககூட யாரும், நம்மில் யாரும் இறங்கினதாகத் தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரை நான் 50 - ஆண்டுகளாக இவைகளுக்கு எதிரியாக ஒழிப்பாளனாக இருந்து வந்திருக்கிறேன். என்னுடைய 30 ஆண்டு சொற்பொழிவுகளை, எழுத்துக்களை கவனித்தவர்களுக்குத் தெரியும் நான் இப்படிப் பட்டவன் என்பது. காந்தியாருக்கும் தெரியும்; இராஜாஜி அவர்களுக்கும் தெரியும். மற்றும் பல பிரபலஸ்தர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும் தெரியும்.

எனக்கு ஆயுள் நெருங்கிக் கொண்டிருப்பதால் சற்று வேகத்தில் செல்வதாகக் காணப்படலாம்! மற்றப்படி புதியதோ மாறுதலோ அல்ல.

நான் சன்யாசி சாது வேஷம் போட்டுக் கொண்டு, விபூதி, நாமம், பட்டை பட்டையாகப் போட்டுக் கொண்டு, கொட்டை உருட்டி முணுமுணுத்துக் கொண்டு இவைகளை எல்லாம் சொன்னால், 'இவர் பெரிய மகான்'என்று, பெரிய மேதாவிகள் என்பவர்கள் எல்லாம் என் காலில் விழுவார்கள்; பணம் கொடுப்பார்கள்; பொன் முதலிய அபிஷேகம் செய்வார்கள்.

ஆனால் நான் சாதாரண, கடைத் தெரு மனிதனாக இருந்து கொண்டு 3-ந்தார மக்களுடன் தோள் சேர்த்துக் கொண்டு மிகமிக எளிதில் இவற்றைப் பேசுவதால், அதோடு காரியத்திலும் செய்ய முற்படுவதால், நான் மக்கள் முன், 'மேதாவிகள்' முன் அலட்சியமாய் காணப்படுவதுடன் பார்ப்பனருக்கு இராவணனாய், சூரன்களாய் காணப்படுகிறேன்.

மதுரையில் 1922-ல் தோழர்கள் வைத்திய நாதய்யர் சீனவாசய்யங்கார் முதலியவர்கள் முன்னிலையில், "மதுரை சொக்க நாதரையும், மீனாட்சியையும் புரட்டிக் கழுவி குளத்துப் படிக்கட்டில் வேஷ்டி துவைக்கப் போடுங்கள்" என்றேன். எஸ். சீனிவாசய்யங்கார் என்னை 'இராஜரிஷி' என்றார். மற்றவர்கள் வ.ராமசாமி அய்யங்கார் உள்பட என்னைக் 'கர்ம வீரன்' என்றார்கள்.

மற்றும் பேயாடுதல், சாமியாடுதல், நெருப்பு மிதித்தல், நெருப்புச்சட்டி,காவடி எடுத்தல், திருப்பதி செல்லல் முதலியவைகளைப் பேசி கீழ்த்தரமாகக் கண்டித்து வருகிறேன்.

எனவே எனது கருத்தில் புதுமை என்ன தவறு என்ன?

"கோவில்கள் குச்சுக்காரி வீடு" என்றார் காந்தியடிகள்.

"கடவுள் என்ற ஒரு தனி வஸ்து இல்லை" என்றார் காந்தியார்.

"I have no belief in personal God" என்று சொன்னார் காந்தியார்.

"கோயில் - கள்ளர் குகை" என்றார் ஏசு.



"கடவுளுக்கு இன்ன (உருவகம்) வைப்பவன் முட்டாள், பாவி, கடவுளின் விரோதி" என்றார் முகமது நபி.

"கல்லும், மண்ணும், பித்தளையும் கடவுளாகுமா முட்டாள்களே!" என்கிறார்கள் சித்தர்கள்.

"கொள்ளை வினைக் கூட்டத்தார் (திருட்டுப் பசங்கள்) சேர்ந்து செய்த பித்தலாட்டம் இது" என்றார் இராமலிங்க அடிகள்.

இன்னும் பல சொல்லலாம். இப்படி இருக்க நான் சொல்லுவது மாத்திரம் எப்படி புதுமையாகும்? பார்ப்பான் பேச்சைக் கேட்டு ஏமாந்து போகாதீர்கள்.

புத்த ஜயந்தி கொண்டாட பொம்மை தயாரித்துக் கொள்ளுங்கள் - சூத்திரர்களே! பஞ்சமர்களே!

**09-05-1953 விடுதலை**

# தோழர்களே 27.05.1953 ஞாபகமிருக்கட்டும்

*பிள்ளையார் உருவத்தை உடைப்பதில் ஒன்றும் அதிசயப்படவேண்டியதில்லை. தயங்க வேண்டியதில்லை! பிள்ளையார் சதுர்த்தி பண்டிகையின் போது நாடு முழுவதும் எத்தனை எத்தனை ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மண்ணு பிள்ளையாரை மக்கள் குயவனிடம் வாங்கி பிள்ளையார் சதுர்த்தி முடிந்தவுடன் கடலில் ஆற்றில் ஓடையில் ஏரியில் குளத்தில் கிணற்றில் புனலில் வயலில் எறிந்து விடுகிறார்கள். அது உடன் கரைந்து நீரோடு நீராக மண்ணோடு மண்ணாக ஆகி விடுவதில்லையா? இது தெரிந்தே மக்கள் நீரில் போடுவதில்லையா?அதுபோன்ற செய்கை தான் இந்த உடைத்துத் தூளாக்கி மண்ணோடு மண் ஆக்குவதுமாகும்.*

*நாம் காசு போட்டு வாங்குகிறோமே ஒழிய வேறு எந்த மனிதனுக்கும் உரிமை இருக்கிற வஸ்துவிடமும் நாம் செல்லவில்லை. தொடவில்லை. நாமாக வாங்கி உடைப்பதும் நமக்குப் பிள்ளையார் கடவுளல்ல!வேத சாஸ்திர ஆதாரம் என்பதின்படியும் அது- கணபதி கடவுளல்ல!கடவுளுக்கு எந்த உருவமும் இல்லை! கணபதி கடவுள் என்பதால் மனிதன் காட்டுமிராண்டி ஆக்கப்படுகிறான். அதற்கு கோவில் பூசை நைவேத்தியம் உற்சவம் முதலியவைகளால் நம் அறிவும் செல்வமும் நேரமும் முற்போக்கும் பாழாகிறது. உண்மையான கடவுள் என்பதும் நாஸ்திகமாகிறது.*

*கணபதிக்கு கற்பிக்கப்பட்டிருக்கிற பிறப்புக்கும் குணங்களுக்கும் மிகுதியும் கீழ்த்தரமானவை அறிவுள்ள மானமுள்ள கடவுள் தன்மை அறிந்த மக்களுக்கு ஏற்றதல்ல. பொறுத்துக் கொள்ளக் கூடியதல்ல! காட்டுமிராண்டி காலத்தில் 1000-2000 ஆண்டுகளுக்கு முன் வெளிநாட்டினரால் ஏற்பட்ட இந்த தேவர் - தெய்வங்கள் உணர்ச்சியே தான் இந்த 1953- ஆம் (விஞ்ஞான) ஆண்டிலும் நமக்கு இருக்க வேண்டுமா?*

*ஆற்றங்கரையில் மூக்கைப்பிடித்து ஜெபித்துக் கொண்டு ஏழையாய் பிச்சை எடுத்து வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய பிராமணர் (பார்ப்பான்) இன்று சக்கரவர்த்தியாக அதாவது 565-தேசங்களுக்கு தேசாதிபதியாக பிரதமாக இருந்து உரிமை அடையும்படி தனது நிலையை மாற்றிக் கொண்டிருக்கும் போது கல்லை- செம்பை- மண்ணை- அழுக்கு உருண்டையை வணங்கிக் கொண்டிருக்கச் செய்யப்பட்ட காட்டுமிராண்டிகளான நாம் மனிதத் தன்மை பெற்று உண்மை சத்தியம் (சத்து) கண்டுபிடித்து மண் பொம்மையை அழிக்கப்படாதா என்று கேட்கிறேன்.*

*இதில் அக்கிரமம் அநீதி அசத்தியம் அறிவில்லாமை அடாது செய்தல் என்ன இருக்கிறது? யார் தான் ஆகட்டும்! ஆத்திரப்படக் காரணம் என்ன இருக்கிறது?மற்றும் இன்று ஆரியப் பார்ப்பனர்களில் சங்கராச்சாரி பார்ப்பனர் முதல் மடிசந்தி பார்ப்பனர் ஈறாக அரசியல் பார்ப்பனர் முதல் சீர்த்திருத்த பார்ப்பனர் ஈறாக ஜட்ஜீ பார்ப்பனர் முதல் அட்டண்டர் பார்ப்பனர் ஈறாக லஞ்சம் ஃபோர்ஜரி பாங்கி மோசடி பார்ப்பனர் முதல் குச்சு நுழைவு மாமா குடி சூதாட்ட பார்ப்பனர் வரை கட்டுப்பாடாக தமிழர்களை மனுகால சூத்திரராகச் செய்து வரும் பார்ப்பன ஆதிக்கப்பிரச்சாரத்திற்கு அரசியல், கல்வி, இயல்,மத இயல்களில் செய்துவரும் நிரந்தர பந்தோபஸ்தான சுயநல ஏற்பாட்டிற்கு தமிழர்களே சூத்திரர்கள் பஞ்சமர் என்பவர்களே என்ன செய்யப் போகிறீர்கள்?*

*இதைவிட வேறு வழி இருந்தால் சொல்லுங்கள்- சூத்திர மந்திரிகளே!*

*சூத்திர பார்லிமெண்ட் சட்டசபை மெம்பர்களே! வைஸ் சேன்ஸ்லர் முதல் கல்விமான்களே! உலகப் பிரசித்தி கோடீஸ்வரர்களே! புலவர்களே! பிரபுக்களே! மாஜி ஜமீன்தார் களே! மாஜி மகாராஜாக்களே ஸ்ரீ-ள-ஸ்ரீ! ஸ்ரீ-ள-ஸ்ரீ!! பண்டார சந்நிதிகளே சொல்லுங்கள். கேட்க தலை வணங்க சித்தமாக இருக்கிறேன்!*

***07-05-1953 விடுதலை***

# விநாயகரை உடைத்தோம்!
# இனி
# ஒரு முக்கிய வைணவக்கடவுளை உடைப்போம்!

நாமும் இந்தக் கடவுள் உடைப்புத் திட்டத்தை விட்டு விடாமல் உடைப்பதற்குப் பொருத்தமான நாளைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

அதற்கேற்றாற் போலவே மே மாதம் 27 ம் தேதி புத்தர் நாள் என்பதாகக் கொண்டாட வேண்டும் என்றிருந்தோம். அதற்கு ஆக சர்க்கார் விடுமுறையும் விட்டார்கள். புத்தர் நாள் தான் இந்த ஆரியக் கடவுள்கள் உடைப்புத் துவக்கத்திற்கு சரியான நாள் என்பதாக நாம் முடிவு செய்து முதலாவதாக எந்தச் சாமியை உடைப்பது என்று யோசித்து, எதற்கும் முதல் சாமியாக இழுத்துப் போட்டுக் கொள்கிறார்களே, அந்தச் சாமியாகி கணபதி உருவத்தை முதலாவதாக உடைப்பது என்று முடிவு கொண்டு மே மாதம் 27 ம் தேதியன்று உடைத்தோம்.

இந்தக் காரியமும், எப்படி ரயிலில் உள்ள இந்தி எழுத்துக்களை 500 க்கு மேற்பட்ட ஊர்களில் 1000 க் கணக்கிலே, 10000 -க் கணக்கிலே ஒருமித்து அழிக்கப்பட்டதோ அதைப் போலவே, இந்த விநாயகர் உடைப்பு ரயில் இல்லாத ஊர்களிலும் சேர்ந்து உடைக்கப்பட்டது! தமிழ்நாட்டின் எல்லா பாகங்களிலும், மூலைமுடுக்குகளிலும்கூட விநாயகர் உருவங்கள் செய்யப்பட்டு உடைக்கப்பட்டன.

ஆனால், இந்தப்படி நாம் உடைத்தால் விநாயகரே ஒழிந்துவிட்டதா? இல்லை. இன்னும் சொன்னால் இப்போது கொஞ்சம் அதிகமாயிற்று. சும்மா கிடந்த பிள்ளையாருக் கெல்லாம் பூஜை புனஸ்காரம் நடத்தினார்கள்.

அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஏனென்றால் முன்பு இருந்த 2- லட்சத்தோடு இப்போது ஒரு 3,000 -சேர்ந்திருக்கலாம்.



அதனால் என்ன பலன்? இந்த 2- லட்சம் பிள்ளையார் ஒழியும் போது, தானாக இந்த 3,000 பிள்ளையாரும் ஒழிந்து தானே போகும்? அல்லது இப்போது புதிதாக இந்த 3000- பிள்ளை யார்கள் போல் உற்பத்தியானதால் இந்த 2 லட்சம் பிள்ளையார்கள் ஒழியாமல் இவைகளால் பாதுகாத்து விட முடியுமா? அது ஒன்றும் இல்லை!

சும்மா எதிர்ப்பு என்கிற பேரால் விளையாடுகிறார்கள். ஆமாம் விளையாட்டுத்தான்; இதைப்பற்றி வேறு என்ன சொல்லுவது? ஏன் இந்தப்படி சொல்லுகிறேன் என்றால், நாம் ஒன்றும் விளையாட்டுக் காரியத்துக்காக இந்தச் சாமிகள் என்பவைகளை உடைக்கவில்லை.

இந்தச் சாமிகள் என்று கொண்டாடப்படுபவைகள் ஆபாசமானது, அசிங்கமானது, அக்கிரமமானது, நம்மை சூத்திரனாகவும், தாசி மகனாகவும், மற்றவர்களுக்கு உழைத்துப் போட்டுவிட்டு ஒன்றும் இல்லாமல் கிடக்க வேண்டியவனாகவும் வைத்திருக்கிறது. அன்னக்காவடிப் பார்ப்பானை, அழுக்குப் பிடித்த பார்ப்பானை, அயோக்கியப் பார்ப்பானை, மேல் ஜாதிக்காரனாகவும், பாடுபடாமல் ஊரார் உழைப்பிலேயே வயிறு வளர்ப்பவனாகவும், சுகபோக வாழ்வுக்காரனாகவும் ஆக்கி வைத்திருப்பது இந்தக் கடவுள் தான்.

எனவே நம்முடைய கீழ்நிலைமை காட்டுமிராண்டித் தன்மை ஒழிய வேண்டும் என்றால், இக்கடவுள்கள் என்பவைகள் ஒழிய வேண்டும் என்று இப்படிப் பல காரணங்களை எடுத்துச் சொல்லி நாம் இந்தக் கடவுள் என்பவைகளை உடைக்கிறோம்.

ஆனால், நமக்கு எதிர்ப்பாளர்கள், எதிரிகள் என்பவர்கள் இதற்குச் சரியான சமாதானம், தெளிவான பதில், நீ சொல்வது தப்பு, அப்படியல்ல, இப்படியல்ல என்று தெளிவான பதிலைச் சொன்னால் ஒப்புக் கொள்ள கொஞ்சம் கூட தயங்கமாட்டோம். அதை ஒருவருமே சொல்லவில்லையே! சொல்ல முடிய வில்லையே! சும்மா! அதோ! அதோ! ராமசாமி நாயக்கன் சாமியை உடைக்கிறேன் என்கிறான். அதனால் நம்முடைய சாமி போச்சு, என்று வெத்துக் கூச்சலிடுவதும் அதற்கு என்ன செய்வதும் என்றால் புதிய சாமிகளை உற்பத்தி செய் என்பதும், தான் அவர்களால் செய்ய முடிந்தது.

சரி, புதிய சாமிகளை உண்டாக்குவது என்றால் யார் உண்டாக்குவார்கள்? ஏற்கெனவே பழைய சாமிகளுக்குக் கும்பிடு போடுகிறவன்தானே புதிய சாமிகளையும் உண்டாக்குவான்! இதுவரையிலே சாமி கும்பிடாதவன், அவைகள் எல்லாம் பித்தலாட்டம் என்று கருதி சொல்லிக் கொண்டிருப்பவன் அந்த சாமிகளையே உடைத்துத் தூள் தூளாக்கத் துணிந்தவன் எவனும் புதிய சாமிகளை உண்டாக்க மாட்டானே! அப்புறம் அதைப்பற்றி நமக்கென்ன கவலை. எப்போதும் முட்டிக் கொள்ளுகிற முட்டாள்கள் முட்டிக் கொண்டு போகட்டுமே! இதில் புதுசென்ன? பழசென்ன?

இன்னும், நாம் பிள்ளையார் உடைக்கிறோம் என்றவுடன், திராவிடர் கழகத்துக்காரனின் பிரச்சாரத்திற்கு எதிர் பிரசார மாக நமது புண்ணிய புராணங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஏற்பாடு செய்து புராணப் பிரச்சாரம் செய்கிறார்கள். அதைப்பற்றியும் நமக்குக் கவலை இல்லை. நாமும் புராணங்களை எடுத்துச் சொல்லி அவைகளில் உள்ள ஆபாசங்களை, அநியாயங்களை, அக்கிரமங்களை, அறிவுக்குப் பொருந்தாத செயல்களை எடுத்துக் காட்டித்தானே அவைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறோம்.

விநாயகரை உடைக்க வேண்டும் என்றால், விநாயகரைப் பற்றிய கதைகள், அவரின் புராணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் காட்டித்தானே உடைக்க வேண்டும் என்று கூறுகிறோம். அதுபோலவே இராமயணத்தைக் கொளுத்த வேண்டும் என்றால், இராமாயணத்தை பக்கம் பக்கமாக கொளுத்த வேண்டும் என்றால் இராமாயணத்தை பக்கம், பக்கமாக, காண்டம், காண்டமாக எடுத்துக் காட்டித்தானே கொளுத்த வேண்டும் என்று கூறுகிறோம்.

நாம் ஒன்றும் சும்மா உடைக்க வேண்டும் - கொளுத்த வேண்டும் என்று சொல்லவில்லையே! இன்னும் சொல்லப் போனால் புராணங்களை அவர்கள் பிரசாரம் செய்வதன் மூலம், அந்தப் புராணங்கள் என்பவைகளின் யோக்கியதை என்ன என்பதை எல்லா மக்களுக்கும் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆதலால் இப்படிப்பட்ட எதிர்ப்பு பிரச்சாரங்கள் பற்றியும் புதிய சாமிகள் உற்பத்தியைப் பற்றியும் நமக்குக் கவலையில்லை. அதனால் ஒன்றும் நட்டம் ஏற்படவே ஏற்படாது!



நாம் விநாயகரை உடைத்தோமே, அதோடு நின்று விடவா போகிறது? இல்லை. இனி மேலும் தொடர்ந்து வரிசையாக இந்தக் கடவுள்களை உடைத்துக் கொண்டே வருவோம்.

முதலில் விநாயகரை உடைத்தோம். அது ஒரு சைவ முக்கிய கடவுள் ஆகும். இனி அடுத்தபடியாக ஒரு வைணவ முக்கிய கடவுளை உடைப்போம். இதைப்போலவே அல்லது அல்லது வேறு அந்தச் சாமியின் விசேஷ நாளிலே உடைப்போம் - உடைக்கத்தான் போகிறோம். இப்போதே சொல்லி வைக்கிறேன் எல்லோரும் தயார் செய்து கொள்ளுங்கள்!

*(05-07-1953 அன்று திருச்சியில் நடந்த திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டத்தில் பெரியார். 11-07-1953 விடுதலை)*

# பிள்ளையார் உடைப்பு – நீதிபதி தீர்ப்பு

மக்கள், வள்ளுர் குறளை ஏற்று நடக்கும் தகுதி பெற்ற பிறகு, அடுத்தபடி என்ன என்று சிந்தித்தேன். புத்தர் கொள்கை பிரசார மாநாடு கூட்டினேன்.

நாம் எந்த லட்சியத்துக்காக நம் இயக்கத்தினை ஆரம்பித் தோமோ அந்தத் துறையில் நல்ல பலன் ஏற்பட்டு வருகிறது.

நம் இயக்கம் நல்ல முறையில் வளர்கிறது, பல கடவுள்கள், உருவ வழிபாடு வேண்டாம் என்று பல ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்து வந்தோம். மக்கள் ஒத்துக் கொள்ளவில்லை! ஏனோதானோ என இருந்தார்கள். மீண்டும் இதையே சொல்லிக்கொண்டிருந்தால் பலன் என்ன? விக்ரகங்களை உடைக்க வேண்டும் என்று தீர்மானித்து அதன்படியே முதலாவதாக விநாயக உருவத்தை உடைத்தோம். ஓர் நாள் குறிப்பிட்டு பல்லாயிரக்கணக்கிலே உடைத்துக் காட்னோம். அது குறித்துகூட சிலர் என் மீது வழக்குத் தொடர்ந்தார்கள்.

4 -நாட்களுக்கு முன்னேதான் நீதிபதி ராமன் நாயர் அவர்கள் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டார். தீர்ப்பில் அவர் குறிப்பிட்டது மிகவும் கவனிக்கத் தக்கது. பிள்ளையார் உருவம் அவர்கள் செய்து அவர்கள் உடைக்கிறார்கள் - நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்? என்று அவர்களைக் கேட்டார். அவர் களுக்கு (ஆஸ்திகர்களுக்கு) இதைப் பார்க்க வயிற்றெரிச்சலாக இருப்பதைக் குறிப்பிட்டார்கள். அதற்கு நீதிபதி "இவர்கள் திடீரென்று உடைக்கவில்லையே! பிள்ளையார் உருவ உடைப்பைப்பற்றி 3- மாத காலமாக பிரச்சாரம் செய்து வந்தார்கள். அவர்கள் உடைக்கும் இடத்திற்கு முட்டாள் தனமாக நீங்கள் ஏன் போனீர்கள்? போய் ஏன் வயிற்றெரிச்சல் படுகிறீர்கள்?" என்று கேட்டார்.

உடைப்பதில் தவறென்ன என்றுதான் நான் கேட்கிறேன்! கடவுள் வேண்டாம் என்று அதை உடைக்கவில்லை. பார்ப்பனன் கற்பனையைத் தான் உடைத்தெறிந்தோம். பிள்ளையாரை



உடைத்தால் கடவுளை உடைத்ததாக ஆகாது. புத்தர் சொல்லி இருக்கிறார். உருவ வழிபாடு வேண்டாம் என்று.

நாங்கள் கடவுள் விலக வேண்டும் என்று சொல்லவில்லை. வேண்டும் என்பவர்கள் 98- சதவீதம் இருக்கலாம். சண்டை யில்லை நமக்கு அத்தனைப் பேரோடும் கடவுள் இருப்பதாக நம்பினாலும் இத்தனை கடவுள் உருவங்கள் ஏன்? அவைகளுக்கு பூசைகள் எதற்கு? கோவில்கள் எதற்கு? அவைகளுக்கு வைப்பாட்டிகள் எதற்கு? குடும்பங்கள் எதற்கு? என்றுதான் கேட்கிறோம்.

ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வையுங்கள். நாங்கள் உருவ வழிபாடு வேண்டாம் என்று புத்தர் சொன்னதற்காகச் சொல்பவர்களல்ல. நாங்கள் சொல்கிற கருத்துக்களுக்கு இயல்பாகவே 2500 ஆண்டுகளுக்கு முன்பே

உலக மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிற புத்தர் கூறினார் என்று எங்கள் கருத்துக்கு ஆதாரம் காட்டுகிறோம். வக்கீல் தனது Law report ல் முன்னாளில் நடந்த தீர்ப்பை எடுத்துக்காட்டுவது போல காட்டுகிறோம்.

புத்தரும் உருவ வழிபாடு வேண்டாம் என்று கூறினார். புத்தர் சாமான்யரல்ல. உலக மக்களால் நன்கு மதிக்கப்படுகிறவர். புத்தர் உயர்ந்தவர் ஞானி என்று எல்லோரும் ஒத்துக் கொண்டுள் ளனர். நம் இந்திய அரசாங்கமே ஒத்துக் கொண்டுள்ளது. புத்தரது சக்கரம் தான் அரசாங்கக் கொடிகளில் உள்ள சக்கரம் - புத்தர் ஸ்துாபிதான் அரசாங்கத்தின் சின்னமாக இருக்கின்றது. புத்தர் நாளை கொண்டாடுவதற்கு என்று **"புத்தர் ஜெயந்தி"** என்று அரசாங்கத்தார் லீவு விடுகிறார்கள். 4- நாட்களுக்கு முன்பு கூட நேரு அவர்கள் புத்தர் ஒரு சிறந்த ஞானி என்று பேசினார். இப்படி அரசாங்கத்தார் மதித்து மதிப்பளிக்கிறார்கள்.

புத்தர் கோட்பாடுகளை ஏன் புறக்கணிக்கிறீர்கள்? எங்கள் மீது ஏன் குறை கூறுகிறீர்கள்? புத்தருக்கும் மற்ற மதத் தலைவர் களுக்கும் பெரிய வேற்றுமை ஒன்று உண்டு. மகம்மதியர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் "நபிகள் தினம்", என்று கொண்டாடுகிறார்கள். நபிகள் கொள்கையைத் தட்டக் கூடாது அவர் கூற்றுக்கள் தான் வேதவாக்கு என்று இஸ்லாமியர்கள் நம்புகிறார்கள். நடைமுறையில் பின்பற்றுகிறார்கள். கிறிஸ்துவர்

களின் நம்பிக்கையும் அவ்வாறே; ஏசுவின் மொழிகளை அப்படியே ஏற்று நடக்க வேண்டும் என்பது தான் மதக்கோட்பாடு.

ரஷ்யாவில் கூட லெனின் இப்படிச் சொன்னார், அதுதான் சிறந்தது என்று

தம் அறிவை ஒரு வகையரையில் நிறுத்துகின்றார்கள். நமது கம்யூனிஸ்டு தோழர்களும்கூட மார்க்ஸ் இப்படிச் சொன்னார்கள்; மக்கள் இன்பமாக வாழ அவர் காட்டும் வழி தான் சிறந்தது என்று கூறுகிறார்கள். ஆனால் புத்தர் அப்படிச் சொல்லவில்லை. "நான் சொல்பிள்ளையார் உடைப்பு - நீதிபதி தீர்ப்பு! றேன் என்பதற்காக நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள் எதையும் யோசித்து ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று தான் புத்தர் சொன்னார். அதையேதான் சுயமரியாதைக்காரர்களாகிய நாங்களும் 30 - வருட காலமாகச் செய்கிறோம்.

சாதாரணமாக நம் இயக்கத்தில் 30- ஆண்டுகளுக்கு முன்பே சிங்காரவேலு போன்ற அறிஞர்கள் புத்தரது கோட்பாடுகளை விளக்கி மக்களிடையே பிரச்சாரம் செய்து வந்தார்கள். Professor லட்சுமி நரசு போன்றவர்கள், அப்பாதுரை, மணியர் போன்றவர்களும் அக்காலத்திலேயே நம் இயக்கத்தை ஆதரித்து எழுதியிக்கிறார்கள்.

புத்தர் கொள்கை பிரசார மகாநாடு என்று நாம் கூட்டி னாலும் இதை பார்ப்பனர்களுக்கு விரோதமாகக் கூட்டப்பட்ட மாநாடு என்று கருதினாலும் தவறில்லை. நம் கருத்தும் அதுதானே. பார்ப்பனன் இந்நாட்டினின்று விரட்டப்பட வேண்டும்.

கழகத் தோழர்களுக்கு இது ஒரு முக்கியமான திருப்பம். 20- வருடங்களாக நாம் "வழவழ"வென்று ஓயாமல் பேசிக் கொண்டே இருந்து விட்டோம். அதே இடத்திலிராமல் நாம் வேகமாக முன்னேறுகிறோம். கடவுள் உருவங்களை உடைக்கிறோம். நாம் கோவிலை இடிக்க மாட்டோம் - உயிருள்ள விக்ரகங்களையும் உடைக்கவில்லை.



அதாவது பார்ப்பனன் தொட்டு பூசை செய்கிற கோவிலில் உள்ள விக்ரகங்களை உடைக்கிற வேலையைத் தொடங்க வில்லை. அப்படிப் பார்ப்பனர்களுடைய கோவில் விக்ரகங்களை உடைப்பதாகக் கூறினால் ஒவ்வொரு கடவுளுக்கும் இரண்டு போலீஸ்காரர்களை காவலுக்குப் போட்டு விடுவார்கள். மக்கள் மடமையிலிருந்து கற்பனைப் புளுகுகளிலிருந்து விடுபட வேண்டும்.

*(23-01-1954 அன்று "ஈரோடு" புத்தர் மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி 29-01-1954 "விடுதலை" இதழில் வெளியானது.*